செ.வெ.எண்:41 நாள்:25.06.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் மீன்வளம் - மீனவர் நலத்துறை சார்பில் மீனவர்களுக்கு மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் காணொலி காட்சி மூலம் 25.06.2021 இன்று நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மீன்வளம் - மீனவர் நலத்துறை சார்பில் மீனவர்களுக்கு மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் காணொலி காட்சி மூலம் 25.06.2021 இன்று நடைபெற்றது.

மீன்வளம் மற்றும் மீனவர்களின் மேம்பாட்டினை உயர்த்த தமிழக அரசு பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன்படி கடலோர உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், மீன்பிடி துறைமுகங்கள் அமைத்தல் ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவிக்க படகு அமைப்பதற்கு மானியம் வழங்குதல், நவீன மீன்விற்பனை நிலையங்கள் அமைத்தல், மீன்வளர்ப்பிற்கு மானியம் வழங்குதல் ஆகும். மேலும், பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப புரதசத்து மிகுந்த உணவினை அளிப்பதிலும் மற்றும் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குவதிலும் மீன்வளம் - மீனவர் நலத்துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்நிலையில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மீன்வளம் - மீனவர் நலத்துறை சார்பில் மீனவர்களுக்கு மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் காணொலி காட்சி மூலம் 25.06.2021 இன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாகூர் முதல் அண்ணாபேட்டை வரையிலான 25 மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவ பஞ்சாயத்து மற்றும் கூட்டுறவு சங்கத்தலைவர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மீனவர்கள் குடிநீர் வசதி, மின்சார வசதி, இலவச வீட்டுமனை பட்டா, புதிய வீடுகள் அமைத்துதருதல், மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம், உயர் கோபுர மின்விளக்கு வசதி, சாலை வசதி, ஆறு தூர்வாருதல், துறைமுக படகு அணையும் சுவர் விரிவாக்கம் மற்றும்

மீனவர்களுக்கு மீன்வள பல்கலைகழகத்தில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு செய்து தரக் கேட்டுக்கொண்டனர்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் மேற்படி அனைத்து மீனவ மக்களின் கோரிக்கைகளையும் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டத்தில் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் திருமதி.இ.ஜாய்ஸ் ஆலிவ் ரேய்ச்சல், மீன்துறை இணை இயக்குநர், (மண்டலம்) நாகப்பட்டினம், திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,செயற்பொறியாளர், மீன்பிடி துறைமுக திட்டக்கோட்டம், மற்றும் திரு.கோ.ஜெயராஜ், மீன்துறை உதவி இயக்குநர், நாகப்பட்டினம் (தெற்கு) ஆகியவர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**